# நெஞ்சில் நிறைந்த சஞ்சீ



## அமரர் சோமசுந்தரம் சஞ்சீவன்

(யாழ் இந்துக்கல்லூரி 2001ம் ஆண்டு உயர்தர கணிதப்பிரிவு மாணவன்)

அன்னையின் அரவணைப்பில்
26.07.1982

அந்நியர் அழிப்பில்
13.07.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் இந்துக் கல்லூரி 2001ஆம் ஆண்டு உயர்தர கணிதப் பிரிவு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் 25 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

காலம் : 13-07-2025 ஞாயிறு காலை 9மணி

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
விடுதிச்சாலை மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்:

உருவப்படத்திற்கு குடும்பத்தார் மலர் மாலை அணிவித்தல்
நினைவு உரைகள்
நினைவு நூல் வெளியீடு
குருதிக்கொடை நிகழ்வு
கற்றல் மண்டபம் தொடக்க நிகழ்வு
மதிய உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்து கல்லூரி 2001 உயர் தர மாணவர் சோமசுந்தரம் சஞ்சீவன் நினைவாக:

2000 ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் தேதி, யாழ்ப்பாணம் இந்து கல்லூரியின் உயர் தர மாணவரான எங்கள் நண்பர் சோமசுந்தரம் சஞ்சீவன், கல்வி நிலையத்திலிருந்து வீடு திரும்பும் போது, இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். இது, யாழ்ப்பாணத்தில் உள்ள மாணவர்களிடையே பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. சஞ்சீவனின் இறப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, யாழ்ப்பாணத்தின் பல பள்ளிகளில் மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து மூன்று நாட்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சஞ்சீவனின் இறுதி ஊர்வலத்தில், அவரது உடலை பள்ளி வளாகம் வழியாக கொண்டு செல்ல மாணவர்கள் முயற்சி செய்தனர். ஆனால், இராணுவத்தினர் அதை தடுக்க, ஊர்வலத்தை வேறு பாதையில் திருப்பினர். பின்னர், மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்ததைத் தொடர்ந்து, இராணுவம் மாணவர்களுக்கு மிரட்டல் விடுத்து, சஞ்சீவன் ஒரு தீவிரவாதி என குற்றம் சாட்டியது. இந்த குற்றச்சாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பள்ளியின் முதல்வர் ஸ்ரீகுமாரன், யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாகியை சந்தித்து, விசாரணை நடத்தக் கோரினார். ஆயினும் சஞ்சீவனது கொலைக்கு நீதி வழங்கப்படவில்லை.

நாம் மறக்க முடியாத எங்கள் சக மாணவர் சஞ்சீவன் நினைவாக, 2001 முதல் ஒரு தங்கப்பதக்கம் வழங்க ஏற்பாடு செய்தோம். ஆண்டுதோறும் குருதிக்கொடை நிகழ்வுகளை நடாத்தி வருகிறோம்.

அவரது 25ஆவது நினைவு நாளில் பாடசாலையில் சஞ்சீவன் நினைவுப் படிப்பறை ஒன்றினை ஆரம்பிப்பதுடன் குருதிக் கொடை, நினைவு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்துள்ளோம்.

அந்த நிகழ்வினை ஒட்டி வெளியாகும் இந்தப் பிரசுரத்தில் சஞ்சீவன் நினைவு மலரில் இருந்தும் அக்காலப் பத்திரிகைகளில் இருந்தும் செய்திகளையும் நினைவஞ்சலிகளையும் மறு பிரசுரம் செய்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் நிறைந்த சஞ்சீ

முந்தைத் தமிழர் பல்லாயிரமாண்டு
முடிசூடி யேசெங்கோ லாட்சி செய்த
செந்தமிழ் செழிக்கின்ற ஈழநாட்டின்
சென்னியாய் விளங்கும் யாழ்ப்பாணத்தின்

வண்ணார் பண்ணைப் பதியினிலே
வாழ்கின்ற சோமசுந்தரர்க்கும்
அன்னை ராஜினி அம்மையார்க்கும்
ஆண்மகவொன்று உதித்ததுவே

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டில்
ஆடித் திங்கள் யூலையிருபத்து
ஆறாம் நாளில் அவனியிலோர்
அழகுத் திருமகன் உதித்தனனே

சஞ்சீவி மலை மனதில் வந்ததாலோ
எம்ஜீவன் இவனென்றே கொண்டதாலோ
சஞ்சீவன் என்றே பெயருஞ் சூட்டி
தம் ஜீவனா யுன்னை வளர்த்த நாளில்

தம்பியென ரஜீவனும் அவனின் பின்னால்
தங்கையராய் நிலானி, டிலானியரும்
அன்பினிலே வளர்ந்து வரு நாளிலிந்தி
அரக்கர்களின் எறிகணை வீச்சினாலே

தம்பி ரஜீவன் துடிதுடித்தே
தன் நான்கு வயதினிலே உடலை நீத்தான்
வெம்பி நின்ற பெற்றவர்கள் உன்னையேனும்
விளங்க வைக்க வேண்டுமென்ற விருப்பத்தாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில்
சேர்ப்பித்துச் சிறப்பாக கற்க வைத்தார்
நன்மா ணாக்கனாய்ப் பண்பாளனாய்
நாளொரு மேனியுடன் வளர்ந்தே வந்தாய்

கோகுலத்து கண்ணனோ கோசலையின் மைந்தனோ
பாரதத்துத் தர்மனோ பார்புகழும் கர்ணனோ
ஆதிசிவன் மைந்தரில் அட இவன்தான் இளையனோ
பூதலத்தோர் வியப்புற புகழுடனே வளர்ந்து பின்

மத்திய கல்லூரி அன்னையின் மைந்தனாய்
புத்தியும் மனச்சுத்தியும் உடையோனாய்
சத்தியந் தவறாத் தன்னிகரில்லானாய்
நித்திலம் போற்றத் தினந் தினம் உயர்ந்தாய்

பின்னர் இந்துக் கல்லூரியிலே
அன்பும் பண்பும் நிறை மாணவனாய்
மன்னாக நீ மிளிர்ந்தாய் - நட்பின்
மேன்மையினை அனைவரையும் உணர வைத்தாய்

கட்டழகன் காண்போரைக் கவருகின்ற காந்தம் போல்வான்
சட்டென்று பகிடி சொல்லிச் சகலரையும் சிரிக்க வைப்பான்
வெட்டொன்று துண்டிரண்டு - வேசங்கள் போடாதவன்
வெட்டி பேச்சுக்கள் வீணாகப் பேசாதவன்

உறுதிமிகுந்த உடலிருந்துஞ் சிறு
எறும்பிற்கும் கூட எத்தீங்கும் செய்யாதோன்
அறிந்து தவறு விடான் - அறியாமற் தவறிப்பின்
தெரிந்தால் துடிதுடிக்கும தெளிந்த மனடையோன்

வருட விளையாட்டுப் போட்டிகள் வருகிறதே
விடலாமா இம் முறை ஈட்டி தட்டு எறிதலிலே
பெற வேணும் முதலிடம் என்கின்ற இலட்சியத்தில்
திறமாகப் பயிற்சி செய்து வரு நாளில்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகர்கள் வெறியினால் சஞ்சீயெம்மைப் பிரிந்தனன்.

மகனே! அண்ணா ! நண்பா சஞ்சீயென்றெல்லோரும்
அகமேயுருகி அழுதிங்கு நிற்கின்றார்
மறைந்தும் மறையாத மாணிக்கம் எம் நெஞ்சில்
நிறைந்தே வாழ்வான் நீடு

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையும் தனிமுயற்சியும் மிக்க கணித மாணவன்

கணித மாணவன் சஞ்சீவன் கற்பனவற்றைக் கசடறக் கற்று கற்ற வழியில் அன்பு, அடக்கம், ஆற்றல், நம்பிக்கை, முயற்சி, கனிவு, பணிவு, பண்பு ஆகிய வழிகளை தன் வழியாகக் கொண்டவன். கல்லூரி வரலாற்றுச் சாதனை ஏட்டில் பெயர் பதிப்பான் என்றிருந்தோம். ஆனால் அவனது பிரிவுத் துயர் கல்லூரி வரலாற்றேட்டில் சோகம் நிறைந்த பக்கங்களில் இடம் பெற்று விட்டது என்பதை எண்ணி ஆற்றொணாத் துயரமடைகின்றேன். கல்லூரியின் கணிதமெனும் பூஞ்சோலையில் மலர்ந்த செடி மணம் பரப்பாமலே மேலும் தளிர் விட்டு தழைக்காமல் வாடிக் கருகியது கல்விச் சமூகத்திற்கு வேதனை அளிக்கின்றது. இவர் தனது சக மாணவர்களுடன் உடன் பிறந்தவர்களைப் போல வேற்றுமையின்றி உள்ளன்புடன் பழகி வந்தான் என்பதை அவதானித்துள்ளேன்.

பணிவும் கனிவும் மிக்க சஞ்சீவன் கற்பித்த ஆசிரியர்களை கண்கண்ட தெய்வமாகப் போற்றினான் என்பதற்கு மரணத்தின் பின் அவனது வகுப்பில் கற்பித்த ஆசிரியர்கள் கூறிய கூற்றுக்கள் சான்று பகருகின்றன. கல்லூரியில் மட்டுமன்றி கல்லூரிக்கு வெளியிலும் ஒழுக்கமும் தெய்வ பக்தியும் சமூகத் தொண்டும் பெரியோர்பால் மதிப்பும் கொண்டு செயல்பட்டிருக்கின்றான் என்பதை அவனது இறுதி ஊர்வலத்தில் திரண்ட பெருந்தொகை மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் ஊடாக உணர்ந்து கொண்டேன்.

கணித மாணவர்கள் பெரும்பாலும் தன்னம்பிக்கையும் தன்முயற்சியும் உடையவர்கள், தங்கள் ஆளுமைத் திறமைகளை உருட்டித் திரட்டி இரத்தினச் சுருக்கமாய் அடக்கி வெளிக்காட்டுபவர்கள். இத்தகைய பண்புகள் நிறைந்திருந்த சஞ்சீவன், நடைபெற்ற கல்லூரி மட்டத் தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்ததை அவதானித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தோற்ற இருந்த பொதுத் தேர்விலும் வெற்றிமாலை சூடுவான் எனக் கணித்திருந்தோம். ஆனால் வல்லவனான நல்லவனை இறைவன் விரைவில் எடுத்திடுவான் என்பதற்கேற்ப அவனது இழப்பு அமைந்து விட்டது. அவனது இழப்பால் தமிழ் சமூகம் கலங்கியது.

அவனது பேரிழப்பால் தவிக்கும் தாய், தந்தை, சகோதரர்களுக்கு இறைவனே ஆறுதல் அளித்து அமைதியடையவும் அவனது ஆன்மா இறையடி சேரவும் இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

பொ.மகேஸ்வரன்
பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே தேடுவோம் எம் நண்பனை?

வெள்ளிக் கிழமையொன்று வேதனையாய் விடிந்ததடா
பள்ளிக் கூடமெங்கும் கண்ணீராய் வழிந்ததடா
கொள்ளிக் கட்டைகளாய் காதிற்சேதி வீழ்ந்ததடா
துள்ளி எழுந்தெங்கள் இரத்தங் கொதித்ததடா

ஆளப் பிறந்தவன்நீ அனாதரவாய்ப் போய்விட்டாய்
ஈழத் திருநாட்டில் தவறுதலாய்ப் பிறந்து விட்டாய்
சூழப் பட்டிங்கு சுடுபட்டுப் போய்விட்டயாய்
கோழை களாய் நாமிங்கு கண்ணீரில் கரைகின்றோம்

ஆனோல்ட் சுவாஸ் நேகரென்று அன்பாகப் பெயர் வைத்தோம்
ஆனாலும் உன்மனம் ஆணவம் கொள்ளவில்லை
கானல்நீர் கண்டமான்போல் உனைக்காண ஓடி வந்தோம்
காணாமல் போய்விட்டாய் காற்றுடன் கலந்து விட்டாய்
அரும்புகின்ற மீசையுடன் அழகனாய்த் தெரிந்தவனே
குருத்துவிட்ட மரமாகக் குதூகலமாய் திரிந்தவனே
இரும்பென்ற உனதுடலை இரும்பொன்றா துளைத்ததடா
கரும்பாக இனித்தவனே உனைக் காண்ப தினியெங்கே

உன்தம்பி வழியில்நீ பறந்தோடிப் போய்விட்டாய்
உன்தங்கை யிருவரும் அந்தரித்து நிற்கின்றார்
உன் தந்தை தாயவரும் தனித்துப் போய் நிற்கின்றார்
உன்வாழ்வு விடிந்ததெல்லாம் இளவயதிற் போவதற்கா?

புத்தர் வழிநின்ற "புனிதர்கள்" தூண்டி விட்ட
சுத்த இனவெறியால் எமைப் பிரிந்த எம் நண்பா
எங்கே தேடுவோம் எம் நண்பனை?
அவனின் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்

-நண்பர்கள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரன் சஞ்சீவனின் ஆத்மா சாந்தியடைய

அப்பாவி மாணவன் சஞ்சீவனின் மறைவு யாழ்குடா நாட்டையே அதிர வைத்த ஒரு துன்பியல் நிகழ்வு.

ஆயுதம் தரித்தோரின் கட்டுப்பாடற்ற தான்தோன்றித்தனமான கொடூர அவசர புத்தி - காரணமாக ஒரு பாவமும் அறியாத ஒரு குருத்தோலை குதறி வீசி எறியப்பட்டது.

தனது தேகத்தைச் செழுமையாகப் பேண வேண்டும் என்பதற்காக உடற்பயிற்சியில் ஈடுபட்டது தவிர வேறெந்தக் குற்றமும் இழைக்காத இந்த இளம்பயிரை வெறும் சந்தேகம் என்ற கண்ணாடியால் பார்த்து மரணம் என்ற கொடூர தண்டனையை நிறைவேற்றி இருக்கின்றார்கள் நமது சட்டத்தின் காவலர்கள் (?)

பிரேத பரிசோதனை அறிக்கையில் மருத்துவர் தெரிவித்த உண்மைகளைக் கூட அம்பலமாக்காமல் மூடி மறைப்பதற்கு வழி செய்துள்ள அவசரகாலச் சட்ட விதிகள், கொலைக்குற்ற மிழைத்தவர்களுக்கு பாதுகாப்பு அரணாக அமைந்திருப்பது நமது நாட்டில் சட்டம், நீதி, ஒழுங்கு முறையின் சிறப்பை (?) வெளிப்படுத்தும் ஓர் உரைகல்.

ஏற்கனவே தாங்க முடியாத கொடுமைகளை, கொடூரங்களை தாங்கிக் கொண்டு, அதன் விளைவாக தான் செல்வதற்கு இலக்கு வைத்துக் கொண்ட இலட்சியப்பாதையை நோக்கி நகர்வதற்கு நமது சமூகம் பெற்றிருக்கும் நெஞ்சுரத்துக்கு சஞ்சீவனின் மரணம் போன்ற துன்பியல் நிகழ்வுகள் மேலும் உரம் சேர்ப்பவையாக அமையும் என்பது திண்ணம்.

இந்தியப் படைகளின் அராஜகத்துக்கு தமது ஒரு மகனை இழந்த சோமசுந்தரம் குடும்பத்திற்கு, வழி காட்டியாய் எஞ்சியிருந்த இந்த ஒரே மகனின் இழப்பு தாங்க முடியாதது. வாழ்க்கை முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலை எட்ட முடியாத சோகத்தைப் பற்றிப் பீடிக்க வைத்துள்ளது. அவர்களின் சோகத்தில் நாமும் இணைந்து கொள்வது தவிர, அவர்களுக்கு ஆறுதல், தேறுதல் கூறும் வழியேதும் எமக்கு புலப்படவில்லை.

பூத்து நறுமணம் வீச முன்னரே மொட்டில் கருகிய அன்னை யாழ் இந்துவின் அருந்தவப் புதல்வர்களின் ஒருவன் - சகோதரன் சஞ்சீவனின் ஆத்மா சாந்தியடைய நமது கல்லூரியின் அருள் தெய்வமாம் ஞாவைரவரை இறைஞ்சுகின்றோம்.

ந.வித்தியாதரன்
(செயலாளர்)
யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமசுந்தரம் சஞ்சீவன் ஆத்ம சாந்திக்கு

எமது யாழ் மாவட்ட உயர் கல்லூரி யாழ் இந்து மாணவன் சோ.சஞ்சீவன் அதிபர் ஸ்ரீகுமரன் அவர்கள் தமது சொந்த மைந்தனை இழந்தவர் போல் அன்று அறைந்து காணப்பட்டார். ஒழுக்கமான, ஒழுங்கான, அதிதிறமை மாணவனை இழந்து, ஈடு செய்ய முடியாமல் தவித்தார்.

எல்லோரும் சோகமாய், இறுதி கட்ட வேண்டுமென்ற ஆக்ரோஷத்துடன் முழுக்கல்விச் சமூகமும்? முழுவரை அழித்தாலும் உண்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற ஆவேசம் எல்லோரிடமும். எனது அயல்பிள்ளை, திறமையான மாணவனை இழந்த விட்டேனே என்ற மன அழுத்தம், தாங்க முடியா நிலையில் இடுகாடு வரை சென்று வந்ததில் சோகத்தை பகிர்ந்த ஆறுதல்.

மாணவ சமூகத்திற்கு, கல்வியை முன்னெடுப்பதில் இத்தகைய இடர்பாடு உண்டு என்று சாட்சியமான சஞ்சீவன் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

அன்புடன்
ச.நா.தணிகாசலம்பிள்ளை
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா.அ.இ.பேணாட் அவர்கள் வழங்கிய இரங்கல் செய்தி

நற் பூவாய் மலர்ந்து நறுமணம் பரப்புமுன்பே
சிறு மொட்டாய் பறிக்கப்பட்ட சஞ்சீவனுக்கு
எமது அஞ்சலி

செறிந்திருந்த அறிவாற்றலை வளர்த்துக் கொண்டிருந்த
மாணவப் பருத்தில் ...
பதுமையான சுபாவத்துடன் இனிய பண்புகளை
வளர்த்துக் கொண்டிருந்த இளம் வயதினில்....
தம்பியை சிறுவயதிலேயே பலிகொடுத்து
இப்போது குடும்பத்தின் ஒரே ஆண்பிள்ளையாய்
பொறுப்புடன் செயல்பட பயின்று கொண்டிருந்த
பராயத்தில்....
பெற்றார், உறவினர், நண்பர்கள், சக மாணவர்கள்
யாவரையும் துயரத்தில் ஆழத்தி, பரிதாபகரமாகப்
பறிக்கப்பட்ட
இந்த நல்ல ஜீவனுக்கு எனது அஞ்சலி.

இவரது ஆன்மா சாந்தி பெறவும்
பரிதவிக்கும் உற்றார் ஆறுதல் அடையவும்
இறைவன் அருள்வாராக

வண.பிதா.அ.இ.பேணாட்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபருமான திரு.க.இராசதுரை அவர்களின் இரங்கற் செய்தி

மாணவன் சுகந்திரமாக நடமாடி அதன் மூலம் அவன் அனுபவக் கல்வி பெற வேண்டுமென்கிறது கல்வித் தத்துவம், உளவியல் என்ற எல்லா ஊடகங்களும் அதன் அடிப்படையின் ஒரு கற்றறிந்த தந்தையாக தனது மகனை வெறுமனே "ஏட்டுக் கல்வியை மட்டும் பெற்று - "காகிதப் பெறுபேற்றுக்காக மட்டும் நெறிப்படுத்தாது வாழ்தலுக்குத் தேவையான சகல துறைகளிலும் - அவனின் இயல்பூக்கத்துக்கேற்ப இயங்க வைத்த தந்தை இன்று தனது மகனை இழந்து சோகப்புயலால் ஒதுக்கப்பட்டு துடிப்பதை தந்தையின் நிலையில் இருந்து நானும் பார்க்கின்றேன். எனது துயரம் மௌனமாக ஆனால் கதறி அழும் நிலையில் துடிக்கிறது.

யுத்தத்தின் தீ நாக்கினால் சுவை பார்க்கப்பட்ட எத்தனை குடும்பங்கள் இன்று தாயை இழந்து, தந்தையை இழந்து உடன் பிறப்புக்களை பறிகொடுத்துப் பரிதவிக்கின்றது. கோழி முட்டையை கொத்திப் பிளந்து உலகில் வாழவென வெளிவந்த குஞ்சு நசுக்கிக் கொல்லப்பட வேண்டுமா?

வேரெறிந்து கற்பாறையைப் பிளந்து நீர் பெற நிலத்தில் செறிந்து நிற்கும் தாவரம் கசக்கி வீசப்பட வேண்டுமா?

எனது மாணவன் சஞ்சீவனின் அவலச் சாவு - அநியாய நிகழ்வு கல்வி உலகால் தாங்கிக் கொள்ள முடியாது. மாணவர்களால் மறக்க முடியாதது. இது "நடந்தாக அமைந்து விடட்டும் இனி நடக்காது இருக்க இனியாவது ஒரு வழி செய்வோம்.

-க.இராசதுரை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சஞ்சீவன்" நினைவலைகள்

சஞ்சீவன் என்றதும் புன்னகை தவழும் முகத்துடன் தளர்நடை நடந்து வரும் சிறுவனின் தோற்றமே எம் கண்ணில் நிழலாடும்.

கண்ணீர் அஞ்சலியில் ஒட்டப்பட்ட படம் கண்டதும் பல ஆண்டுகளுக்குமுன் எம் பாடசாலையில் நின்ற தோற்றமும், சிறு சிரிப்புடன் ஓடி வரும் பாவமுமே நிழலாடிற்று.

கண்ணியம் கட்டுப்பாட்டுடன் துருதுரு என்று செயற்பட்ட சிறுவன். ஆசிரியர் சொற்கடிபணிந்து மாணவர் குழாத்துடன் ஒத்திசைவுடன் பழகிக் கல்வி பயின்ற பண்பாளன். நிச்சயம் எதிர்காலத்தில் சிறந்த கல்விமானாகத் திகழும் தன்மை நிரம்பிக் காணப்பட்டவன். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்னும் பழமொழிக்கிணங்க வாழ்ந்த நன்மாணாக்கன். குழந்தை என்ற அரும்பாகி பிள்ளை என்ற மொட்டுருவில் எம் பாடசாலையிற் சேர்க்கப்பட்ட சஞ்சீவன் மொட்டு முகிழும் பருவத்தில் வேறு பாடசாலைக்கு சென்றார். மலராக முகிழ்ந்து மணம் வீசத் தொடங்கிய முன்னிளமைப் பருவத்தில் இம்மலர் கொடூரமாக சிதைக்கப்பட்டு அதன் மணமும் முடக்கப்பட்டுவிட்ட செய்தி எம் எல்லோருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தாமல் இருக்க முடியவில்லை. சஞ்சீவன் என்ற நாமம் எம் நினைவுகளில் என்றும் நீங்காத அலைகளாக அலைமோதி எம் மனதை வருடிக் கொண்டே இருக்கும்.

அதிபர், ஆசிரியர்கள்
யாழ்/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியனாக வாழ்ந்த இளைஞர்

பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோரின் உள்ளங்களில் பொங்கியெழும் எண்ண அலைகள் ஆனந்தம். தமது பிள்ளை தரமான உயர்கல்வியைப் பெற்று சபை நடுவில் தன் மகனைச் சான்றோனாகக் கேட்க விரும்பாத பெற்றோர் எவராவது இந்த நாட்டில் இருக்க முடியாது.

பெற்றவர்களின் எதிர்காலக் கனவுகளை நனவாக்க செல்வன் சஞ்சீவன் எமது நிறுவனத்தில் அன்பு, அடக்கம், கட்டுப்பாடு, பணிவு என்பவற்றைக் கட்டிக்காத்து கல்வியிலும் சிறந்து விளங்கிப் பெற்றோரிற்கு மட்டுமல்லாது கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்தார். இவர் கல்வியில் மட்டுமல்லாது இசைத் துறையிலும் தேர்ச்சி பெற்று, சிறந்த பேச்சாற்றல் உடையவராகவும் விளங்கினார்.

நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விதியின் கருணையற்ற விளையாட்டினால் தன் மகனை இழந்த சஞ்சீவனின் தாய் தான் கண் விழிக்கும் பொழுதெல்லாம் அழுதுகொண்டு கதிரையில் இருப்பதாக சஞ்சீவனின் தந்தையார் கூறினார். இந்த வேதனைக்கு யாருக்கு யார் ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை. இவரது தாங்க முடியாத பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் சோகத்தை எமது நிறுவனமும் பகிர்ந்து கொள்கிறது. அவரது ஆன்மா சாந்தி அடைவதாக.

"குடம்மை தனித்தொழியப் புள்பறந்தற்றே உடம்போடு
உயிரிடை நட்பு" - குறள்

க.வேலாயுதம்
"மணிக் கல்வி நிறுவனம்"
தலையாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருகிய இளந்தளிர்

மெல்லிய குழந்தை உள்ளம், எதையும் தீர விசாரித்து உணர்ந்து சிந்திக்கும் பக்குவம், தன்னை சூழ உள்ள நண்பர்களின் உணர்வுகளை மதிக்கும் ஆற்றல், எத்துணை நெருக்கடிகள் வந்தாலும் கலங்காத மனோதிடம் வாய்ந்த அறிவுவலு என்ற பன்முகப்பட்ட பண்புகள் நிறைந்த ஓர் இனிய மாணவனாக திகழ்ந்த அன்புச் சகோதரன் சஞ்சீவனின் திடீர் மறைவு என் நெஞ்சத்தை நெருப்பாக உருக்குகின்றது. கல்வியுலகம் திறமையாளன் ஒருவனை இழந்து துடிக்கிறது. வீடு நிறைந்த செல்வம் ஒன்றை பறிகொடுத்து அவரது குடும்பத்தினர் படும் வேதனைகள் வார்த்தைகளில் வடித்துவிட முடியாது.

கல்வித்துறையில் தனக்கென தனி முத்திரை பதிக்க வேண்டும் என்பதே சஞ்சீவனது ஒரே இலட்சியமாக இருந்தது. தான் கொண்ட இலட்சியத்தை எய்த வேண்டும் என்பதில் விழிப்புடன் இருந்து அதற்காக தன்னை தயார்ப்படுத்திக் கொண்டிருந்தவர் "சஞ்சீவன்" தானே எதிர்பார்த்திராத மரணத்தை அரவணைக்கும் வேளையில் கூட அவனிடம் அவனது இலட்சியம் சுடர் விட்டு பிரகாசித்திருந்தது. "திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்" என்ற பாரதியின் பாடல் வரிகளே அடிக்கடி அவர் வாயில் இருந்து வரும் வார்த்தைகள். வீரமும் அறிவும் வாய்க்கப் பெற்றால் வாழ்வு ஒளிமயமாகும் என்ற கோட்பாட்டை தனக்குள்ளே வகுத்து அந்த வாழ்வை தேடி சிறகடித்த தம்பி சஞ்சீவனின் மறைவு தமிழ் உலகில் ஈடு செய்ய முடியாதது.

சஞ்சீவன் வயதில் சிறியவனாயினும் தான் சார்ந்த சமூகத்தில் உயரிய சிந்தனை கொண்ட ஒரு உன்னத மனிதனாக திகழ்ந்தார். சமூகத்துடன் கண்ணியமான உறவை பேணி சமூகத்திற்கு வழிகாட்டும் ஒரு சிறந்த பண்பாளனாக திகழ்ந்த அவரது திடீர் மறைவு ஜீரணிக்க முடியாத பேரிழப்பு. எமது சமூகத்தில் அவரது இழப்பை எவ்வகையிலும் ஈடு செய்ய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவ்வுலகம் நிலையாமை என்ற பெருமையை உடையது நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்தது இவ்வுலகு என்கிறது வள்ளுவம்.

நேற்று இருந்த ஒருவன் இன்றில்லை என்ற உலக நிலையாமை நியதியை மனதில் கொண்டு சஞ்சீவனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விஸ்வலிங்க மகாகணபதிப் பெருமானின் பாதங்களில் இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி !

சி.இளங்கோ (B.A. (CEY)
-ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதியின் செயல் கண்டு விம்முகின்றேன் இந்துவின்

"யாழ் இந்துவின் மைந்தர்களில் ஒருவன் அகால மரணம்" செய்தி கேட்டுத் துடித்தேன். சகோதர உணர்வுடன் ஓடிச் சென்று கண்டென் உடலை பிர்க்கப்பட்ட உயிர் எனது மாணவனின் உயிராகவும் இருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

பிறப்பு நிகழ்ந்ததும், இறப்பும் ஒரு நாள் நிகழும் என்பது சர்வ நிச்சயம் என்பதில் வரும் சாவு சாதாரணமானது, பதினெட்டில் வரும் சாவு? நெஞ்சு துடிக்கிறது, ஈரமில்லா இதயமுடையவர்களின் அராஜகம் கண்டு அமைதியும் அடக்கமும் உடைய மாணவர்களில் ஒருவனாக வகுப்பறையில் சஞ்சீவன் இருந்த காட்சி நிழலாடுகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு பிறந்தவன், வாழ்வின் முதல் அத்தியாயம் முடியுமுன்னரே மண்ணுக்குள் சங்கமமாகி விட்ட நிகழ்வு கண்களை குளமாக்குகிறது. காலச்சக்கரம் அராஜக மரணங்களை என்றுதான் முடிவுக்கு கொண்டு வருமோ யார் அறிவார்?

சஞ்சீவனின் உற்ற நண்பர்கள் ஆர்ப்பரித்து எழுந்த போது அவர்களை அமைதிப்படுத்த முடியாமல் தவித்தோம். சஞ்சீவனின் நண்பர்கள் விதியின் செயலை உணர்ந்து அமைதியடையட்டும். மைந்தனை இழந்து துடிக்கும் பெற்றாருக்கு ஆறுதல் கூறவல்லார் யார்? இறைவன் ஒருவனால் தான் அவர்களுக்கு அமைதியைத் தரமுடியும்.

மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமையை முடிக்காமல், முடிக்க முடியாமல் சஞ்சீவனின் ஆவி பிரிந்தது வேதனைக்கு உரியது. துன்பம் தொண்டையை அடைக்கும் போது ஆண்டவன் சந்நிதிதான் நிம்மதி தரமுடியும். துன்பத்தில் சிக்குண்டு தவிக்கும் பெற்றோர், சகோதரிகள், உறவினர் நண்பர்கள் வரும் விதியின் வலிய செயல் கண்டு அமைதியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

சஞ்சீவனின் ஆன்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

இரா. செல்வவடிவேல் (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நீங்காத நினைவில் மாணவன் சஞ்சீவன்

கம்பீரமான தோற்றம் அமைதியும் அடக்கமுமான மாணவன் சக மாணவருக்கு முன்மாதிரியாய் திகழ்ந்தவன். இவையனைத்திலும் மேலாக கல்வியில் மிகவும் ஆர்வமுள்ளவன். அத்தனை ஆற்றலையும் கொண்டவனை பூமி சுமப்பது தாங்காமல் தானோ என்னவோ இறைவன் ஆட்கொண்டுவிட்டார்.

சிறந்த புதல்வனை இழந்த அக்குடும்பத்திற்கும், சக மாணவனை இழந்த மாணவச் சமுதாயத்திற்கும் மனச் சாந்தியையும் எம் மாணவச் செல்வனிற்கு ஆத்ம சாந்தியையும் அளிக்க இறைவனை வேண்டுகின்றேன். ஓம் சாந்தி!!!

நிர்வாகி, ஆசிரியர்கள், ஊழியர்கள்
New Science Hall



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமும் விவேகமும் நிறைந்த மாணவன்

சோமசுந்தரம் சஞ்சீவன் எனது பயிற்சி நிலையத்தின் சிரேஷ்ட முன்னணி மாணவன் மட்டுமல்ல எனது மூத்த மகனின் இணைபிரியா நண்பனும் கூட. அவன் எனது பயிற்சிக் கூடத்திற்குள் நுழைந்தால் போதும் - ஒரே மகிழ்ச்சி ஆரவாரம் தான். திறந்த உள்ளத்துடன் இனிமையாக கலகலப்பாகப் பழகுவார். என்னிடத்தில் மட்டும் குருமரியாதையும் மதிப்பும் கொண்டு அளவோடு பழகுவார்.

கல்வியில் எவ்வளவு ஆர்வமோ அது போன்று உடற்பயிற்சியிலும் விடாமுயற்சியும் ஆர்வமும் கொண்டவர். எந்த விடயத்தை எடுத்தாலும் செய்து முடிப்பேன் என்கிற திடநம்பிக்கை கொண்டவர். எந்த ஒரு விஷயத்தையும் தெளிவாக தெரிந்திருக்க வேண்டும் என்கின்ற ஆர்வமும் அவரிடம் உண்டு.

13.07.2000ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் சென்று வருகின்றேன் என்று கூறிவிட்டுச் சென்றவர் அப்படியே சென்று விடுவார் என்று நான் நினைக்கவில்லை. அநியாயமான ஒரு சிறந்த மாணவனின் பிரிவு என்னையும் என்னைச் சூழ உள்ளவர்களையும் ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது பயிற்சி நிலையத்தின் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி!!!

S.ஜெயேந்திரன் (காந்தன் மாஸ்ரர்)
21/61 ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்
உடற்பயிற்சி நிலையம் (Weight lifting Center)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருங்கால கணித மேதையை இழந்து பரிதவிக்கின்றது எங்கள் கிராமம்

எமது குடும்பத்துடன் இளம்பிராயம் தொட்டு தொடர்பு கொண்ட தம்பி சோமசுந்தரத்தின் தலைமகன் சஞ்சீவனின் மறைவு பேரிழப்பாக நெஞ்சில் விழுந்தது. பெற்றோரின் செல்வப் புதல்வனாக சிறந்த கல்லூரி முதல் நிலை மாணவனாகவும், பண்புள்ள வளர்ப்பினாலும் திறன்கள் ஆற்றல்கள் நிரம்பியிருந்தமையாலும், அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்களின் அன்பிற்கும் பாத்திரமாகத் திகழ்ந்த பெருமைக்குரியவன் சஞ்சீவன். இவரின் இழப்பு கல்வியுலகிற்கு பேரிழப்பாகும். சஞ்சீவன் இருந்திருந்தால் அவரின் வழிகாட்டலில் எத்தனையோ சஞ்சீவன்கள் தோன்றியிருப்பார்கள். குடும்பத்தில் தலைமகனாக வந்துதித்து எத்தனையோ கனவுகளையெல்லாம் நினைத்திருந்த பெற்றோரைப் பரிதவிக்க விட்டு சென்றது காலனின் கொடுமை. அவரின் மறைவு கண்டு அவரின் குடும்பம் மட்டுமல்ல இக் கிராமம், கல்வியுலகம் யாவுமே கலங்கி நிற்கின்றது. இக்கொடுமை தமிழ் சமுதாயத்திற்கே பேரிழப்பாகும்.

சஞ்சீவன் ஆன்மா சாந்தியடையவும் அவரின் குடும்பத்தார் ஆறுதலைடையவும் விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

தாசு. லோகநாதன் (ஜேபி)
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் இந்து மாணவன் கொலை : வடமாகாண அதிபர்களின் சங்கம் பலத்த கண்டனம்

யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு வடமாகாண அதிபர்கள் சங்கம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மேற்படி சங்கம் நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மாணவனின் கொலையை கல்விச் சமூகத்தின் சார்பில் வடமாகாண அதிபர்கள் சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. மிகுந்த துன்பங்களையும் துயரங்களையும் தனது நெஞ்சில் சுமந்தபடி தனது எதிர்காலக் கனவை நனவாக்கவும் தான் தங்கியுள்ள தனது குடும்ப நலவாழ்வுக்காகவும் தன்னைப் போஷித்த சமுதாயத்துக்காகவும் உழைத்து நின்று கல்விக் கடமையைத் தவிர வேறு பக்கத்தில் தனது கவனத்தை சிதைக்காத யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் இழப்பு எமது இதயங்களை உலுப்பிவிட்டது.

அப்பாவி மாணவன் ஒருவனை கண்மூடித்தனமாக தாக்கி அவனது மரணத்துக்கு காரணமாக இருந்தவர்கள் அவனைப் “பயங்கரவாதிகள்” எனக் கூற முனைந்ததும் - அவனைப் பெற்றவர்களே அதனை ஏற்றுக் கொண்டு ஒப்பமிடவேண்டி வற்புறுத்தி நின்றதையும் மனச்சாட்சியுள்ள எவராலும் சகித்துக் கொள்ள முடியாது.

மாணவ சமூகம் மட்டுமல்ல முழுத் தமிழ் சமூகமுமே இந்தப் பயங்கர நிலைமையினால் பதற்றம் அடைந்துள்ளது. இந்நிகழ்வுக்கு யார் உடனடிக் காரணமாக இருந்தார்களோ அவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்படும் வரை எமது மக்களின் பாதுகாப்புக்கு எவ்வித உறுதிப்பாட்டையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. இது போன்ற சம்பங்கள் இனிமேலும் நடக்காதபடி சம்மந்தப்பட்டவர்கள் பார்த்துக் கொள்வதுடன் அவர்களின் உறுதிமொழியும் காப்பாற்றப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் சம்மந்தப்பேட்டோர் உடன் இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதனை அதிபர்கள் சங்கம் மிகவும் இறுக்கமாக வலியுறுத்துகின்றது. இதயத்தை நெருடும் இத்துயரமான நிகழ்வுக்கு முகம் கொடுத்து தாங்க முடியாத துயரத்தில் மூழ்கியுள்ள அமரர் சோ.சஞ்சீவனின் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம் - இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கலைப்பீட மாணவரும் கண்டித்து அறிக்கை**

கடந்த 13ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமும் அறிக்கை ஒன்றை விடுவித்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரம் வருமாறு:-

நேற்று முன்தினம் ஊரடங்கு அல்லாத மாலை வேளையில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் கொக்குவில் பகுதியில் வைத்து சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஒரு அப்பாவி மாணவன் மிகவும் மிலேச்சத் தனமாக தாக்கப்பட்டு பின் படுகொலை செய்யப்பட்மையினை பல்கலைக்கழக மாணவர் சமூகம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் சம்மந்தப்பட்ட கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட தரப்பினை வேண்டுகிறது.

சமாதானத்தினையும் நல்வாழ்வினையும் ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாக கூறி யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்த அரசு குடாநாட்டில் செய்து வருகின்ற படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள், மனித உரிமை மீறல்கள் அப்பாவிப் பொதுமக்களை மிக மோசமாக பாதித்து வருகின்றன. மேற்படி வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் வேண்டுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாழி சூட்டுச் சம்பவம் : பிரேத பரிசோதனையின் பின் மாணவனின் சடலம் ஒப்படைப்பு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் கடந்த வியாழன் இரவு பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட யாழ் இந்துக்கல்லூரி உயர் வகுப்பு கணிதப் பிரிவு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் (வயது 18) சடலம் நேற்று மாலை பிரதே பரிசோதனையின் பின்னர் அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மாணவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் யாழ் கல்விச் சமூகத்தை பெரிதும் உலுப்பியுள்ளது. இப் படுகாலையைக் கண்டித்து நேற்று குடாநாட்டில் தனியார் ரியூட்டரிகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. இவை அன்று இயங்கா என்று நேற்றெ அங்கு அறிவிக்கப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவம் குறித்து யாழ்நகரில் இயங்கும் பல்வேறு சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தமது சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. சர்வதேசத் தொண்டு நிறுவனம் ஒன்று தனது பிரதிநிதிகளை சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் தலையாழிப் பகுதிக்கு நேற்று அனுப்பி சுயாதீன விசாரணைகளை நடத்தியதையும் அவதானிக்க முடிந்தது.

**சஞ்சீவனின் மரணம் குறித்து நீதி விசாரணைக்கு தயார் ! படைத்தரப்பினர் தெரிவிப்பு.**

யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் மரணம் குறித்து பக்கச் சார்பற்ற நீதி விசாரணை நடத்துவதற்கு தயார். அத்தகைய விசாரணைகளில் தலையிடாமல் அவை சுகந்திரமாக நடப்பதை படைத்தரப்பு உறுதி செய்யும். இத்தகைய விசாரணைக்குத் தேவையான சாட்சியங்களை அளிக்க மக்கள் அச்சமின்றி முன்வர வேண்டும். அவர்களின் பாதுகாப்புக்கு முழு உத்தரவாதமும் உறுதியும் வழங்கப்படும். இவ்வாறு இராணுவத் தரப்பில் நேற்று உறுதியளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவனின் மரணம் தொடர்பாக ஆட்சேபத்தையும் கண்டனத்தையும் நேரில் வெளிப்படுத்துவதற்கு கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் மட்டக்குழுவொன்று நேற்றுக் காலை இராணுவ - பொலீஸ் உயரதிகாரிகளைச் சந்தித்தது. யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்டலில் இராணுவத்தின் 51வது படையணித் தலைமையகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

கல்விச் சமூகத்தின் சார்பில் யாழ் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை, வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும், யாழ் மத்திய க்லலூரி அதிபருமான கே.இராஜதுரை, யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் ஸ்ரீக்குமரன் மற்றும் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பிதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

படையினர் மற்றும் பொலீஸார் தரப்பில் 51 ஆவது படையணிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர, யாழ் சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர் யு.காமினி குணசேகர மற்றும் யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதிகளின் படை அதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சம்மந்தப்பட்ட மாணவன் கல்லூரியின் கணிதப் பிரிவில் திறமையை வெளிப்படுத்தியவர்களில் ஒருவர் என்றும் - அவரது குடும்பத்தவர்களைக் கடந்த பல தசாப்தங்களாகத் தனக்கு நன்கு தெரியும் என்றும் - அந்த மாணவனுக்கும் இயக்க நடவடிக்கைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று தான் உறுதியாகக் கூறுவதாகவும் - யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் குறிப்பிட்டார். ஏனைய பிரதிநிதிகளும் இதே கருத்தை வலியுறுத்தினர்.

இந்தப் படுகொலை குறித்து நீதியான - பக்கச்சார்பற்ற- விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், இத்தகைய சம்பங்கள் கல்விச் செயற்பாடுகளைப் பாதிக்கும் எனவும், எனவே உரிய நடவடிக்கையை எடுப்பதன் மூலம் மாணவர்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்றும் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளையும், அதிபர் கே.இராஜதுரையும் வலியுறுத்தினர்.

விடுதலைப் புலிகளின் இரு தலைவர்களைப் படையினர் பிடிக்க முயன்ற சமயம் சம்மந்தப்பட்ட இந்த இளைஞரும் அவர்களும் சேர்ந்து தப்பியோட முயன்றதாகவும் - அப்போது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த இருவருக்கும் உதவியாகச் செயற்பட்டவராகக் கருதப்படும் இந்த இளைஞன் உயிரிழந்ததாகவும் - அவரிடமிருந்து கிரேனேட் உட்பட சில பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் - இராணுவத் தரப்பில் தமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக படையணித் தளபதி குறிப்பிட்டார்.

அது தவறு என்று மறுத்துக் கூறிய தூதுக்குழுவினர், சம்மந்தப்பட்ட மாணவனைப் பிடித்து வைத்திருந்த பின்னரே அவர் சுடப்பட்டிருக்கின்றார். என்றும் அதற்கு முன் அவர் தாக்கப்பட்டிருக்கின்றார் என்றும் கூறப்படுவதாக தெரிவித்தனர்.

இதனை சட்ட வைத்திய அதிகாரியின் பிரரேத பரிசோதனை அறிக்கையும் நிரூபிக்கும் எனத் தாங்கள் எதிரிபார்ப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அதனை நிரூபிப்பதற்கு மேலதிக சாட்சியங்களை மரண விசாரணையின் போதும் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கும் படியும் - மாணவனின் மரணம் தொடர்பான விசாரணைகளில் இதுவரை தாயாரைத் தவிர வேறு எவரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்றும் - சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இது விடயத்தில் பக்கச் சார்பற்ற நீதி விசாரணை நடப்பதை உறுதிப்படுத்தும் படியும் படை அதிகாரிகளோ அல்லது வேறு எவருமோ இந்த விசாரணைகளில் தலையிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரத் பொன்சேகா உத்தரவிட்டிருப்பதாக ஜெனரல் ஜயசுந்தர தெரிவித்தார். சம்மந்தப்பட்ட நீதி விசாரணைக்குரிய சாட்சியங்களை ஆஜர் செய்வதற்கு தூதுக் குழுவினர் உறுதியளித்தனர்.

இறுதிச் சடங்கில் சகலரையும் பங்குபற்றுமாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் கோரிக்கை இன்று நடைபெறும் யாழ்.இந்து மாணவன் அமரர் சோ.சஞ்சீவனின் இறுதிக் கிரியைகளில் சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அமரத்துவம் அடைந்த மாணவனுக்கு இறுதி அஞ்சலி செலுத்துமாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அண்மையில் இடம் பெற்ற பல்வேறு சம்பவங்களினாலும் இடம் பெயர்வுகளாலும் எமது மாணவர் சமூகம் தமது கல்வியை மேலும் இழந்துள்ளது.

எவ்வாறெனினும் எமது கண்டனத்தை ஒருமனதாகத் தெரிவிக்கும் தார்மீக உரிமையிலிருந்து நாம் தப்பி விடமுடியாது. அதனால் தான் நாம் ஒருமித்தும் ஒரே குரலிலும் காட்டிய எதிர்ப்பினாலும் கண்டனத்தாலும் இராணுவ உயர் அதிகாரிகளும், பொலீஸ் உயர் அதிகாரிகளும் - அமரர் சோ. சஞ்சீவனின் மரணம் தொடர்பாக நீதியான விசாரணை நடத்த நீதிமன்றத்துக்கு இவ் விவகாரத்தை எடுத்துச் செல்ல இணங்கியுள்ளதுடன் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாதிருக்கவும் உறுதியளித்துள்ளனர்.

எமது மாணவரின் கல்வியையும் பாதுகாப்பையும் எல்லா விதத்திலும் தடுக்கும் எந்த சக்தியையும் நாம் அனுமதிக்க முடியாது. இழந்த கல்வியை எமது மாணவர்கள் மீளப் பெறவேண்டியது மிக அத்தியாவசியமானது. அதனால் மாணவர்கள் தமது சோகத்தை சக்தியாக்கி இழந்த கல்வியை மீட்கும் தமது கல்விப் பாரம்பரியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியை தொடர வேண்டும். எனவே பாடசாலைகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் மாணவர்கள் நாளை முதல் சென்று தமது கற்றல் நடவடிக்கையை தொடர வேண்டும். இப்படி இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**யாழ் இந்து மாணவன் கொலைக்கு கண்டனம்**

யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொல்லப்பட்ட சம்பவத்தை கண்டித்து வடமாகாண ஆசிரியர் சங்கம் மற்றும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழகத்தின் பல்வேறு பீட மாணவர் ஒன்றியங்கள் அறிக்கை வெளியிட்டது.

**வடமாகாண ஆசிரியர் சங்கம்**

மாணவன் சோ.சஞ்சீவனின் பரிதாப முடிவு இந்தப் பிரதேச மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. இப்படி வடமாகாண ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது :-

மாணவன் சஞ்சீவன் கொலை செய்யப்பட்டுள்ளமை குறித்து முழுச்சமூகமுமே திகிலடைந்துள்ளது. இடர்கள் மிகுந்த இந்தக் காலத்திலும் ஒளிமயமான எதிர்கால எதிர்பார்ப்பை மனதில் சுமந்து கருத்தூன்றிக் கற்று வந்த இம்மாணவனின் பரிதாப முடிவு இப்பிரதேச மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியக்கியுள்ளது.

இந்தச்சம்பவத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு சம்மந்தப்பட்டோர் அடையாளம் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் எனவும் கோருகிறது. இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் தொடராதிருக்க உருப்படியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றது. - என்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது என்று வெளியுலகுக்குக் காட்டிக் கொண்டு மிலேச்சத்தனமான படுகொலைகளை மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பிரயோகிக்க வேண்டாம் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசை வற்புறுத்திக் கேட்கின்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவன் சஞ்சீவன் படுகொலை செய்யப்பட்டதை யாழ் பல்கலைக்கழக மாணவர் சமூகம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இவ்வாறான படுகொலைகள் மாணவர்கள் மீதும், அப்பாவிப் பொதுமக்கள் மீதும் நடத்தப்படுவதையிட்டு நாம் மிகவும் வேதனையடைகின்றோம்.

இத்தகைய மனித உரிமை மீறல்களை மேற்கொள்கின்றவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட தரப்பினர்களை கேட்டுக் கொள்கின்றோம். தெற்கில் இருந்து கொண்டு மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம் எனத் தம்மைத் தாமே அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற படுககொலைகள், பாலியல் வல்லுறவுகள், கைதுகள் போன்றவற்றைக் கண்டும் காணாதது போல் இயங்கும் - இந்த அமைப்பை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். என்றுள்ளது.

**முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்**

யாழ் பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளதாவது:

அனைத்து தமிழ் சமுதாயத்தினையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்தப்படுகொலையை ஒருமித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக சமூகமாக கண்டிப்பதோடு கொலை புரிந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு சம்மந்தப்பட்ட தரப்பினரை வேண்டுகின்றோம். அத்துடன் இத்தகைய வன்முறையைத் தொடராதவாறு சம்மந்தப்பட்ட தரப்புக்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றுள்ளது.

**விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்**

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 13ம் திகதி மாலை ஊரடங்கற்ற வேளையில் கொக்குவில் பகுதியில் வைத்து மாணவன் சஞ்சீவன் படுகொலை செய்யப்பட்டான். ஓர் அப்பாவி மாணவன் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட செயல் மிகவும் காட்டுமிராண்டித்தனமானதாகும்.

இதனை எமது பல்கலைக்கழக சமூகம் வன்மையாகக் கண்டிக்கிறது. கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இப்படி தெரிவிக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4pm

6

6 6

6

(4) 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்து 2001ம் ஆண்டு
கணிதப்பிரிவு மாணவன்



**அமரர் சோ. சஞ்சீவன்**

25வது ஞாபகார்த்த

# இரத்த தான முகாம்

இடம் : யாழ் இந்துக்கல்லூரி
விடுதிசாலை மண்டபம்

காலம் : 13.07.2025 ஞாயிறு
காலை 9மணி.

BOASCO printers - 021 312 6118 / 070 698 9464 boascoprinters@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org